தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நாடு போற்றும் நல்லாட்சியில் துணை முதல்வர் உதயநிதி அவார்களின் வழிகாட்டுதலின்படி மன்னார்குடி ஸ்ரீ இராஜகோபால சுவாமி திருக்கோவிலில் இந்து சமய அறநிலையத்துறை சார்பாக 70 வயது மூத்த குடிமக்களை கவுரவிக்கும் நிகழ்ச்சியில், மன்னார்குடி மத்திய ஒன்றிய கழகத்தின் சார்பாக நலத்திட்ட உதவிகள் வழங்கி கவுரவிக்கப்பட்டது. ஒன்றிய செயலாளர் சித்தேரி சிவா மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

நாகை மாவட்டம் நாகை சாமந்தான்பேட்டை மீனவ கிராமத்தில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் சிறிய மீன்பிடி துறைமுகம் அமைக்கும் பணிகளுக்கு பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அடிக்கல் நாட்டினார். உடன் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழக தலைவருமான என்.கௌதமன், நாகை மாவட்ட ஆட்சித்தலைவர் .ப.ஆகாஷ், நாகை உறுப்பினர் தஜெ.முகம்மது ஷா நவாஸ், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், நகரக் கழகச் செயலாளர்கள் நாகை இரா.மாரிமுத்து, நாகூர் எம்.ஆர். செந்தில்குமார், மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் நாகரத்தினம் மற்றும் மீனவ கிராம பஞ்சாயத்தார்கள் உள்ளனர்.

தலைமைச் செயலகத்தில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியனை, மத்திய மெக்சிகோ, அகுவாஸ்கலியென்டஸ் மாநில கவர்னர் திருமதி மரியா தெரசா ஜிமென்ஸ் எஸ்கிவல், மரியாதை நிமித்தமாக சந்தித்து பேசினார். இச்சந்திப்பின் போது, உயர்கல்வித் துறை செயலாளர் முனைவர் பொ.சங்கர், அகுவாஸ்கலியென்டஸ் மாநில பொருளாதார வளர்ச்சி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அரசு செயலாளர் ஈசௌ கார்சா டி வேகா, இலக்குமுறைத் தொடர்பு (DIGITAL COMMUNICATION) இயக்குநர் ஜோஸ் ஜூலியா ரமிரஸ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (S.I.R.) கொண்டு வந்துள்ள பாசிச பாஜக அரசையும், துணை நிற்கும் இந்தியத் தேர்தல் ஆணையத்தையும் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் தஞ்சையில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் மு.வீரபாண்டியன் கண்டன உரையாற்றினார். உடன் மாவட்டக் கழகச் செயலாளர் மாவட்டச் செயலாளர்கள் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, தி.பழனிவேல் , முன்னாள் ஒன்றிய இணை அமைச்சர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ்.கல்யாணசுந்தரம், ச.முரசொலி, முன்னாள் எம்.பி.செ.இராமலிங்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் டி.கே.ஜி.நீலமேகம், கா.அண்ணாதுரை, என்.அசோக்குமார், முன்னாள் எம்.எல்.ஏ எம்.ராமசந்திரன், தஞ்சை மாநகராட்சி மேயர் சண்.இராமநாதன், துணை மேயர்கள் சு.ப.தமிழழகன், மரு.அஞ்சுகம் பூபதி, மாநில கழக நிர்வாகிகள் சி.இறைவன், து.செல்வம், ஆடுதுறை மு. உத்திராபதி, கூட்டணி கட்சி நிர்வாகிகள் து.கிருஷ்ணசாமி வாண்டையார், மு.ஆ.பாரதி, சின்னை பாண்டியன், சி.அமர்சிங், உள்ளிட்ட கழக நிர்வாகிகள், தோழர்கள் கலந்து கொண்டனர்.

துணை முதல்வர் பிறந்தநாள் விழா!

உதகை நகரத்தில் ஏழை எளியோருக்கு நல உதவிகள்!

நகரக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

நீலகிரி, நவ.12- உதகை நகர திமுக ஒருங்கிணைந்த கழக கூட்டம் உதகை மாவட்ட தி.மு.க. அலுவலகம் கலைஞர் அறிவாலயத்தில் நகரக் கழக செயலாளர் எஸ் ஜார்ஜ் தலைமையில் நடைபெற்றது. நகரக் கழக கிழக்கு பொறுப்பாளர் ஜே. எஸ். ரமேஷ் வரவேற்புரையாற்றினர். இக்கூட்டத்தில் தொகுதி பொறுப்பாளர் தென்றல் செல்வராஜ் கலந்துகொண்டு எஸ்.ஐ.ஆர். குறித்தும், 2026 தேர்தல் பணிகள் குறித்தும் சிறப்பான கருத்துக்களை வழங்கி சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் மாவட்டத் துணைச் செயலாளர் ஜே. ரவிக்குமார், மாவட்ட பொருளாளர் ஏ.நாசர் அலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆர். இளங்கோவன், கே தம்பி இஸ்மாயில், நகரத் துணைச் செயலாளர் கே. ஏ. இச்சு பாய், நகர பொருளாளர் அணில் குமார், நகர மன்ற தலைவர் வாணீஸ்வரி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், நகர மன்ற உறுப்பினர்கள், கிளை கழக செயலாளர்கள், பிரதிநிதிகள், வாக்குச்சாவடி பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள், கழகத் தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இக்கூட்டத்தில் தமிழ் நாட்டில் எஸ். ஐ. ஆரை கொண்டு வந்துள்ளதைக் கண்டித்து, கழக தலைவர் தளபதியார் அவர்களின் அறிவிப்பிற்கு இணங்க, நேற்று உதகை ஏ.டி.சி. பகுதியில் தோழமைக் கட்சிகளின் சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் உதகை நகர கழகம் சார்பில் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், வாக்குச்சாவடி முகவர்கள், வாக்குச்சாவடி உறுப்பினர்கள், கழகத் தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

எதிர்வரும் 2026 சட்ட மன்ற தேர்தலில் கழகம் அறிவிக்கும் வேட்பாளர் அதிகம் அதிகப்படியான வாக்குகள் பெற்று வெற்றி பெற செய்வதற்கு கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள் தங்களை தேர்தல் பணிகளை முழு முயற்சியுடனும், அனைவரும் ஒன்றிணைந்து அயராது பாடுபட வேண்டும். மேலும் வாக்கு சாவடி பாக முகவர்கள், வாக்குச்சாவடி அலுவலர்களுடன் இணைந்து எஸ். ஐ.ஆர். வாக்காளர் திருத்த பணியினை சிறப்பாக மேற்கொள்ள வேண்டும்.

எதிர்வரும் 27 11 2025 அன்று பிறந்தநாள் காணும் துணை முதல்வர், உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஏழை எளிய, ஆதரவற்ற முதியோர் களுக்கு மதிய உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பிப்பது என முடிவு செய்யப்பட்டது.

இக்கூட்ட நிறைவில் நகரப் பொருளாளர் அனில் குமார் நன்றி கூறினர்.

சிறுபான்மையின மக்களுக்கு எப்பொழுதும் தி.மு.க. அரசு பாதுகாப்பாக உள்ளது!

பள்ளிவாசல் திறப்பு விழாவில் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பேச்சு!

திருவள்ளூர் நவ.12- பூவிருந்தவல்லி அடுத்த மலையம்பாக்கம் கிராமத்தில் பூவிருந்தவல்லி பெரிய பள்ளிவாசலுக்கு சொந்தமான இடத்தில் புதிய பள்ளிவாசல் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இதன் திறப்பு விழா நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.

இதில் பெரிய பள்ளிவாசல் தலைவர் முஹம்மது ஹனீப் கௌஸ் தலைமை தாங்கினார். செயலாளர் ராஜா உசேன், பொருளாளர் சேக் பரீத், நிர்வாகிகள் மகபூப் பாஷா, அப்துல் ரசாக், அப்துல்சலாம், சதக் கத்துல்லா, யூனுஸ் இப்ராஹிம், ஆதம்ஷா, கலிம்அகமது உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். துணைத் தலைவர் மாஹீன் அபுபக்கர் வரவேற்றார்.

இந்த நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு புதிய பள்ளிவாசல் கட்டடத்தை திறந்து வைத்தனர்.

இதில் அமைச்சர் நாசர் பேசும்போது,

இந்தியாவில் ஜாதி மதம் இனம் மொழி கலாச்சாரம் பண்பாடு என பல்வேறு வகையான மக்கள் இருந்தாலும் வேற்றுமையில் ஒற்றுமை என வாழ்ந்து வருகின்றனர். தற்போது நாடு முழுவதும் சிறுபான்மை யினருக்கு அச்சுறுத்தலான சூழ்நிலை நிலவி வரும் நிலையில் தமிழ்நாடு அரசு சிறுபான்மையினருக்கு பாதுகாப்பாக உள்ளது. முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் சிறுபான்மையினருக்கும் தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் ஏராளமான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. சிறுபான்மையினருக்கு இந்த அரசாங்கம் எந்த அளவுக்கு பாதுகாப்பாக இருக்கிறதோ அதே அளவுக்கு சிறுபான்மையின மக்களும் இந்த அரசாங்கத்திற்கு ஆதரவு தர வேண்டும் என்றார்.

கிருஷ்ணகிரி கிழக்கு ஒன்றியச் செயலாளர்

பி.கோவிந்தன் மறைவு!

கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, நவ.12– கிருஷ்ணகிரி கிழக்கு ஒன்றியச் செயலாளர் பி.கோவிந்தன் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்து துயருற்ற கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கழக முன்னோடி பி.கோவிந்தன் மறைவுக்கு தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துச் செய்தி வெளியிட்டுள்ளார்.

கழகத் தலைவர் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், கிருஷ்ணகிரி கிழக்கு ஒன்றிய செயலாளராகப் பணியாற்றி வந்த பி.கோவிந்தன் அவர்கள் உடல் நலம் பாதிக்கப்பட்டு கடந்த சில தினங்களாக சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று மதியம் 1.00 மணி அளவில் சிகிச்சை பலனின்றி இயற்கை எய்தினார்.

இவர் கடந்த 11 ஆண்டுகளாக ஒன்றிய செயலாளராக பணியாற்றியவர், ஒருமுறை ஒன்றிய குழு உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்.

திறம்பட கழகப் பணியாற்றி வந்த அடலேறு கோவிந்தன் அவர்களின் மறைவு மிகுந்த வருத்தமளிக்கிறது.

அன்னாரை இழந்து துயருறும் அவரது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் கழக முன்னோடிகள் – தோழர்களுக்கும் எனது ஆறுதலையும் – அவரது மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் அவர்கள், தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

கிருஷ்ணகிரி கிழக்கு ஒன்றிய செயலாளர் பி. கோவிந்தன் மறைவு!

கழகத்தினர் அஞ்சலி!

கிருஷ்ணகிரி, நவ. 12- கிழக்கு மாவட்டம், கிருஷ்ணகிரி கிழக்கு ஒன்றிய செயலாளராக பணியாற்றி வந்த பி. கோவிந்தன் அவர்கள் கடந்த சில தினங்களாக உடல் நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார் 10.11.2025 மதியம் ஒரு மணிக்கு சிகிச்சை பலனின்றி இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்னாரது மறைவு செய்தி அறிந்து கழக நிர்வாகிகள் ஏராளமானோர் அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

பி.கோவிந்தன் அவர்கள் கடந்த 11 ஆண்டு காலமாக கிருஷ்ணகிரி ஒன்றிய செயலாளராக கழகப் பணிகளை திறம்பட ஆற்றியவர்.

ஒருமுறை ஒன்றிய குழு உறுப்பினராகவும் சிறப்பாக மக்கள் பணியாற்றியவர். கழகத்தின் சார்பாக நடைபெற்ற அனைத்து ஆர்பாட்டம், போராட்டங்களிலும் மக்களை திரட்டி சிறப்பாக நடைபெறுவதற்கு உறுதுணையாக இருந்தவர். கழகமே உயிர் மூச்சாக முழு நேரம் கழகப் பணியாற்றியவர்.

அவருடைய இழப்பு அவரது குடும்பத்திற்கு மட்டுமல்லாது, நமது கழகத்திற்க்கும் பேரிழப்பாகும்.

அன்னாரது இறுதி ஊர்வலம் நேற்று (11.11.2025 - செவ்வாய்க்கிழமை) மதியம் 1.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட அனைத்து நிர்வாகிகள், கழகத் தோழர்கள் அனைவரும் அன்னாரது இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்துமாறு ஆழ்ந்த இரங்கலுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

உதகை நகர திமுக ஒருங்கிணைந்த கழக கூட்டம் உதகை மாவட்ட தி.மு.க. அலுவலகம் கலைஞர் அறிவாலயத்தில் நகரக் கழக செயலாளர் எஸ் ஜார்ஜ் தலைமையில் நடைபெற்றது. நகரக் கழக கிழக்கு பொறுப்பாளர் ஜே. எஸ். ரமேஷ் வரவேற்புரையாற்றினார். இக்கூட்டத்தில் தொகுதி பொறுப்பாளர் தென்றல் செல்வராஜ் கலந்துகொண்டு எஸ்.ஐ.ஆர். குறித்தும், 2026 தேர்தல் பணிகள் குறித்தும் சிறப்பான கருத்துக்களை வழங்கி சிறப்புரையாற்றினார்.

ஓசூர் மாநகராட்சி, தர்கா அருகில் உள்ள நகர்ப்புற வாழ்வாதார இயக்க கட்டிடத்தில், ஆராதனா தொண்டு நிறுவனத்தின் மூலம் நடத்தப்பட உள்ள அன்புச்சோலை மையத்தினை, மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார், கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர் பிரகாஷ் எம்.எல்.ஏ., ஓசூர் மாநகராட்சி மேயர் சத்யா ஆகியோர் துவக்கி வைத்தனர். உடன், ஓசூர் சார் ஆட்சியர் ஆக்ரிதி சேத்தி, துணை மேயர் ஆனந்தைய்யா, மாவட்ட சமூக நல அலுவலர் சக்தி சுபாசினி, மாநில கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை துணைச் செயலாளர் மாதேஸ்வரன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.